சுருக்கம்

தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் – அக்டோபர் 2009–ல் நடைபெற்ற நகர்ப்புற உள்ளாட்சி தற்செயல் தேர்தல்களின்போது மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் தொடர்பான தொழில்நுட்ப உதவி அளித்ததற்காக பாரத மின்னணு நிறுவனப் பொறியாளர்களுக்கு ஊதியம், பயணப்படி மற்றும் இதர செலவினங்கள் வழங்க ரூ.1,30,573/– தொகையினை – நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பரா.1) துறை

அரசு ஆணை (நிலை) எண்.95 நாள் 23.9.2010

படிக்கப்பட்டவை:

செயலாளர், தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம், சென்னை–106,
கடித ந.க. எண்.க2/587/2010, நாள் 3.3.2010.

* * *

ஆணை:

படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணைய செயலாளர், 2009–ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்காக நடத்தப்பட்ட தற்செயல் தேர்தல்களின்போது, தேர்தல் நாள் மற்றும் வாக்கு எண்ணுகை நாட்களில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் தொடர்பான தொழில்நுட்ப உதவி பெறும் பொருட்டு பாரத மின்னணு நிறுவன தொழில்நுட்ப வல்லுநர்களை தேர்தல் நடைபெறவுள்ள இடங்களில் அமர்த்துமாறு கோரப்பட்டதாகவும், அக்கோரிக்கையை ஏற்று, எட்டு தொழில்நுட்ப பொறியாளர்களை எட்டு மாவட்ட மையங்களில் பாரத மின்னணு நிறுவனம் தேர்தலுக்கு முந்தைய நாளில் இருந்து வாக்கு எண்ணுகை நாள் வரை (6.10.2009 முதல் 9.10.2009 வரை) அமர்த்தியது என்றும், மேற்படி தொழில்நுட்ப உதவி (Technical Support) வழங்கியதற்காக 8 (எட்டு) பொறியாளர்களுக்கு ஊதியம், பயணப்படி மற்றும் இதர செலவினங்கள் வகையில் ரூ.1,30,573/– (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பதாயிரத்து ஐந்நூற்று எழுபத்து மூன்று மட்டும்) பாரத மின்னணு நிறுவனம் பட்டியல் (எண்.7580550, நாள் 18.11.2009) அனுப்பியுள்ளது என்றும், மேற்படி தொழில்நுட்ப உதவி அளிப்பதற்கு பாரத மின்னணு நிறுவனம் கோரியுள்ள தொகையானது இந்தியத் தேர்தல் ஆணையம் தனது கடிதம் எண்.51/8/16/4/2009/EMS/3490, நாள் 2.3.2009–ல் நிர்ணயித்துள்ள, நாளொன்றுக்கு ஒரு பொறியாளருக்கு ரூ.3500/– வீதம் பயணப்படிகள் மற்றும் இதர செலவினங்கள் என்ற அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

2. மேலும், தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தின் பொறுப்பில் உள்ள 7938 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் 15 மாவட்ட மையங்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு தற்செயல் தேர்தல்களின்போது தொடர்புடைய மாவட்ட மையத்திலிருந்து இயந்திரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு தேர்தல்கள் நடைபெற்று வருகின்றன. மேற்படி மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களைச் சரிபார்த்து சான்றளிக்கும் பணி பாரத மின்னணு நிறுவனத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வந்ததால் பிப்ரவரி 2009 தற்செயல் தேர்தல்கள் வரை தொழில்நுட்ப உதவி அளித்ததற்கு பாரத மின்னணு நிறுவனத்திற்கு கட்டணம் ஏதும் வழங்கப்படவில்லை. அக்டோபர் 2009–ல் தேர்தல்கள் முடிவடைந்த நிலையில், நவம்பர் 2009–ல் பாரத மின்னணு நிறுவனத்திலிருந்து பட்டியல் பெறப்பட்டு, மேற்படி தொகையை அனுமதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. குறிப்பிட்ட தலைப்பில் தொகை இல்லாத நிகழ்வில் நிதி ஒதுக்கீடு கோரி 3.3.2010–ல் அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

3. எனவே, அக்டோபர் 2009–ல் நடைபெற்ற நகர்ப்புற உள்ளாட்சி தற்செயல் தேர்தல்களின்போது மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் தொடர்பான தொழில்நுட்ப உதவி அளித்ததற்காக பாரத மின்னணு நிறுவனப் பொறியாளர்களுக்கான ஊதியம், பயணப்படி மற்றும் இதர செலவினங்கள் வழங்கவேண்டிய வகையில் ரூ.1,30,573/– (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பதாயிரத்து ஐந்நூற்று எழுபத்து மூன்று மட்டும்) பாரத மின்னணு நிறுவனத்திற்கு வழங்குவதற்காக 2010–2011 நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்து உரிய ஆணை வழங்க தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணைய செயலாளர் அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. அதனடிப்படையில் தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தின் கருத்துருவினை ஏற்று, பாரத மின்னணு நிறுவனப் பொறியாளர்களுக்கான ஊதியம், பயணப்படி மற்றும் இதர செலவினங்கள் வழங்கவேண்டிய வகையில் ரூ.1,30,573/– (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பதாயிரத்து ஐந்நூற்று எழுபத்து மூன்று மட்டும்) பாரத மின்னணு நிறுவனத்திற்கு வழங்குவதற்காக நிதி ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிடுகின்றது.

5. மேலே பத்தி 4–இல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் கீழ்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

| | |
|---|---|
| 2015 – 00 | தேர்தல்கள் |
| 109 | ஊராட்சிகள், உள்ளாட்சி மன்றங்களுக்கு தேர்தல் நடத்துவதற்கான செலவுகள் |
| I | திட்டத்தில் சேராதது |
| AA | ஊராட்சிகளுக்கான தேர்தல் |
| 72 | பயிற்சி |

(து.தொ.கு.2015 00 109 AA 72 08)

6. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினத்திற்கான கூடுதல் நிதியொதுக்கம் வரும் 2010–2011 திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் வழங்கப்படும். அவ்வாறு வழங்குவதை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள செயலாளர், தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம், சென்னை–106 அவர்களுக்கு அதிகாரம் அளித்து ஆணையிடப்படுகின்றது. மேலும் 2010–2011 திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்திற்கான கருத்துருவை

நிதித்துறைக்கு அனுப்பிடும்பொழுது மேற்காணும் செலவினத்தையும் தவறாமல் சேர்த்து அனுப்பிடுமாறு செயலாளர், தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம், சென்னை—106 அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. இந்த அரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.49718/RD/2010, நாள் 16.9.2010—ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்:909 (தொள்ளாயிரத்து ஒன்பது)

(ஆளுநரின் ஆணைப்படி)

கா. அலாவுதீன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
செயலாளர், தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம்,
எண்.208/2, ஜவஉறர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை—106.
கருவூலக் கணக்கு அலுவலர், சென்னை—9.
கருவூலம் மற்றும் கணக்குகள் இயக்குநர், சென்னை—15.
மாநிலக் கணக்காயர், சென்னை—18/9.
மாநிலக் கணக்காயர் (தணிக்கை), சென்னை—18.
நகல்
நிதித் (RD&LE/வரவு செலவு (பொது—II) துறை, சென்னை—9.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //